# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.

## மார்ச் 2019, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு தேர்வு முடிவுகள் வெளியிடுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் செய்திக் குறிப்பு

**நடைபெற்ற மார்ச் 2019, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணாக்கர் மற்றும் தனித்தேர்வர்களின் தேர்வு முடிவுகள் மற்றும் மேல்நிலை முதலாமாண்டு மார்ச் / ஜூன் பருவத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத பாடங்களை மார்ச் 2019 பருவத்தில் எழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் ஆகியவை 19.04.2019 அன்று காலை 9.30 மணிக்கு வெளியிடப்படுகிறது.** தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி, மாதம், வருடத்தினைப் பதிவு செய்து, தேர்வு முடிவுகளை மதிப்பெண்களுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள இணையதளங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

www.tnresults.nic.in
www.dge1.tn.nic.in
www.dge2.tn.nic.in

மேலும், பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் மதிப்பெண்களுடன் கூடிய தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

**பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தியாக தேர்வு முடிவு அனுப்பப்படும்.**

**தனித்தேர்வர்களுக்கும், ஆன்–லைனில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைபேசி எண்ணிற்கு தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக (SMS) அனுப்பப்படும்.**

20.04.2019 அன்று காலை 9.00 மணி முதல் 26.04.2019 வரையிலான நாட்களில் தேர்வர்கள் தாங்கள் பயின்ற பள்ளி / தேர்வெழுதிய தேர்வு மையத்தின் தலைமை ஆசிரியர் வழியாக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தங்களது மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) பெற்றுக் கொள்ளலாம். மேலும் 24.04.2019 அன்று காலை 9.00 மணி முதல் 26.04.2019 வரையிலான நாட்களில் பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் தங்களுக்கான மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து **www.dge.tn.nic.in** என்ற இணையதளத்தில் தாங்களே பதிவிறக்கமும் செய்துகொள்ளலாம்.

### விடைத்தாள் நகல் மற்றும் மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:

விடைத்தாள் நகல் மற்றும் மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் 22.04.2019 (திங்கட்கிழமை) முதல் 24.04.2019 (புதன்கிழமை) வரை விண்ணப்பிக்கலாம்.

தேர்வர்கள் தங்களது **விடைத்தாளின் நகல் வேண்டுமா? அல்லது மதிப்பெண் மறுகூட்டல் செய்ய வேண்டுமா?** என்பது குறித்து தெளிவாக முடிவு செய்து கொண்டு அதன் பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விடைத்தாளின் நகல் பெற்றவர்கள் மட்டுமே விடைத்தாள் மறுமதிப்பீடு கோரி பின்னர் விண்ணப்பிக்க இயலும்.

விடைத்தாளின் நகல் கோரி விண்ணப்பிப்போர், அதே பாடத்திற்கு மதிப்பெண் மறுகூட்டலுக்கு தற்போது விண்ணப்பிக்கக் கூடாது. விடைத்தாளின் நகல் பெற்ற பிறகு அவர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

**<u>விடைத்தாளின் நகல் (Copy of the answer script) பெறுவதற்கான கட்டணம் :</u>**

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு பாடத்திற்கும் | – | ரூ.275/– |

**<u>மறுகூட்டல் (Retotalling) கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| உயிரியல் பாடத்திற்கு மட்டும் | – | ரூ.305/– |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |

**<u>பணம் செலுத்தும் முறை :</u>**

விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>விடைத்தாள் நகல் – இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளும் முறை :</u>**

விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டினை மாணவர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒப்புகைச் சீட்டில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளவும், மறுகூட்டல் முடிவுகளை அறிந்து கொள்ளவும் இயலும்.

விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் மற்றும் இணையதள முகவரி பின்னர் வெளியிடப்படும்.

**<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு சிறப்பு துணைத் தேர்வுகள், ஜூன் 2019:</u>**

மார்ச் 2019, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத தேர்வர்கள் ஜூன் 2019, சிறப்பு துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை மற்றும் விண்ணப்ப தேதிகள் குறித்து விரைவில் தனியே அறிவிப்பு வெளியிடப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஜுன் 2019, மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்பு துணைத்தேர்வு 06.06.2019 முதல் 13.06.2019 வரையிலான நாட்களிலும், மேல்நிலை முதலாமாண்டு சிறப்பு துணைத் தேர்வு 14.06.2019 முதல் 21.06.2019 வரையிலான நாட்களிலும் நடைபெறவுள்ளது.

**ஒம்./–**
**இயக்குநர்**

**நாள் : 16.04.2019.**
**இடம் :** சென்னை – 600 006.

**<u>நகல்</u> :**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.